செய்தி வெளியீடு எண்.750 நாள்: 20.11.07

**<u>மாநகராட்சி சமுதாயக் கல்லூரியில் பயின்ற</u>**
**<u>90 மாணவ/மாணவியர்களுக்கு</u>**
**<u>தனியார் நிறுவனத்தில் பணிபுரிவதற்கான ஆணைகள்</u>**
**<u>மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை</u>**
**<u>அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வழங்கினார்</u>**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை மாநகராட்சி மேயராக இருந்தபோது 1999ம் ஆண்டு ஏழு கிணறு, திருவல்லிக்கேணி, புரசைவாக்கம், ஆழ்வார்பேட்டை ஆகிய நான்கு இடங்களில் சமுதாயக் கல்லூரிகளை தொடங்கினார். கழக அரசு பொறுப்பேற்றவுடன் இக்கல்லூரிகள் மீண்டும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரிகள் வேலைவாய்ப்பினை, செயல்திறனை, தொழில் பயிற்சியினை அடிப்படையாக கொண்டு தரமான கல்வியை வழங்கி வருகின்றன. சமூக, பொருளாதார, கல்வி நிலையங்களில் மிகவும் பின்தங்கியுள்ளவர்களுக்கு இக்கல்லூரியில் முன்னுரிமை வழங்கி சேர்க்கப்படுகின்றனர்.

சென்னை மாநகராட்சி சமுதாய கல்லூரியில் கணினி நுட்பவியல், அச்சுத்தொழில் நுட்பவியல், இரண்டு / நான்கு சக்கர வாகன நுட்பவியல், பெண் செவிலியர் உதவியாளர், கணினி பழுது பார்ப்பு மற்றும் பராமரிப்பு, அலுவலக மேலாண்மை, உணவக மேலாண்மை மற்றும் ரொட்டி தயாரிப்பு ஆகிய எட்டு வகையான தொழிற் கல்விகள் கற்பிக்கப்பட்டு மாணவர்களுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. ஆகஸ்டு 2006 வரை 1900 மாணவ / மாணவியர் பயிற்சி பெற்றவர்களில் 90 சதவீதம் பேர் வேலை வாய்ப்பினை பெற்று குடும்பத்திற்கு பெரிதும் துணை நிற்கின்றனர்.

தற்போதைய நடைமுறை வாழ்விற்கு ஏற்ற **Business Process Outsourcing ( B.P.O.), Customer Relations and Sales, Hospitality Services** ஆகிய புதிய 3 மாத குறுகிய கால தொழிற் பாட பிரிவுகள் சென்னை மாநகராட்சியின் சமுதாய கல்லூரி, அருணாசலம் தெருவில் இக்கல்வி ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது.

இத்துறையில் அனுபவம் பெற்ற டாக்டர் ரெட்டி பவுண்டேஷன், ஹைதராபாத் ( Dr. Reddy's Foundation, Hyderabad ) என்ற தரமான நிறுவனமும், சென்னை மாநகராட்சியும் சேர்ந்து பயிற்சிகள் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் ஆகஸ்டு 2007ல் முதல் கட்டமாக 105 மாணவ / மாணவிகள் சேர்க்கப்பட்டு, அதில் பயிற்சியை முழுமையாக முடித்த 90 மாணவ / மாணவிகளுக்கு முன்னோடி நிறுவனங்களான மெக்டோனால்ட்ஸ் ( MCDONALDS ) , இம்பெடஸ் ( IMPETUS (Reliance) ) அர்விந்த் பிராண்ட்ஸ் ( ARVIND BRANDS (Retail) ), ஏ.பி.என். ஆம்ரோ ( ABN AMRO ), நோக்கியா ( NOKIA ), ஸ்மோக்கிங் ஜோ'ஸ் ( SMOKING JOE'S(Hotel) ), ஸ்பென்சர்'ஸ் டெய்லி ( SPENCER'S DAILY ) , வோடோபோன் (VODAFONE (Hutch) ), டிஸ் டி.வி. ( DISH TV ), காபி டே ஹோட்டல் (COFFEE DAY(Hotel)) and ஸ்டார் சிட்டி ஹோட்டல் ( STAR CITY Hotel ) போன்ற மாநகராட்சி முயற்சியுடன் பணிபுரிய தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு சராசரியாக ரூ.4000/– முதல் ரூ.6000/– வரை மாத வருமானம் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கான ஆணைகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (20.11.2007) தலைமைச் செயலகத்தில் மாணவ / மாணவிகளுக்கு வழங்கி வாழ்த்து தெரிவித்தார். பணி ஆணை பெற்ற இக்கல்லூரி மாணவ / மாணவியர்கள் மாண்புமிகு அமைச்சருக்கும், மாநகராட்சிக்கும் நன்றி தெரிவித்தனர்.

சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., துணை மேயர் திருமதி.ஆர்.சத்தியபாமா, மன்ற ஆளுங்கட்சித்தலைவர் திரு.ந.இராமலிங்கம், மன்ற எதிர்க்கட்சித்தலைவர் திரு.சைதை ப.ரவி, நிலைக்குழுத்தலைவர்(கல்வி) திருமதி.கே.ஜானகி, இணை ஆணையர்(கல்வி) திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., மண்டலகுழுத்தலைவர் திரு.எம்.ஜெயராமன், நியமனக்குழு உறுப்பினர்கள் திரு.த.வி.முத்துக்கிருஷ்ணன், திரு.மு.வேலாயுதம் ஆகியோர் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**